இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 10 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 03 – வியாழக்கிழமை 20 ஆகஸ்ட் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 10 : Thiruvalluvar Year - 2057 - Aavani 03 - Thursday 20 August 2026 - Dak 10 Pages ₹ 5.00

## கடந்த 100 நாட்களில் 300 கொலைகள்! 500க்கும் மேற்பட்ட பாலியல் குற்றங்கள்!

# த.வெ.க. ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு! வேடிக்கை பார்க்கும் காவல்துறை!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற வடக்கு மண்டல கழக வழக்கறிஞர்கள் அணிக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம்!

**சென்னை, ஆக. 20 -**

**த.வெ.க. ஆட்சியில் கடந்த 100 நாட்களில் 300 கொலைகள், 500க்கும் மேற்பட்ட பாலியல் குற்றங்கள் நடைபெற்றுள்ளன. இச்சம்பவங்களை காவல்துறை வேடிக்கை பார்ப்பதா? என்று கேள்வி எழுப்பி வடக்கு மண்டல கழக வழக்கறிஞர்கள் அணிக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ தலைமையில் நடைபெற்ற தி.மு.கழக சட்டத்துறை சார்பில், வடக்கு மண்டல வழக்கறிஞர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தீர்மானம் – 1**

**மேகதாது அணை - த.வெ.க. அரசுக்குக் கண்டனம்!**

தமிழ்நாடு அரசு மேகதாது அணையை கட்டுவதில் குறியாக இருந்து செயல்பட்டு வரும் நிலையில், ஒன்றிய அரசின் ஒப்புதல் கிடைத்து விட்டதாக காரணம் காண்பித்து, கர்நாடக அரசு மேலும் தனது போக்கில் தீவிரம் காட்டியதை கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கண்டனம் தெரிவித்ததை, இந்த அரசு அலட்சியப்படுத்தியது.



பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டச் சொன்னபோது, அரசு மௌனமாகவே இருந்தது.

இதற்கிடையில் பெங்களூரு சென்று கர்நாடக முதலமைச்சரை சந்திக்க தமிழ்நாடு முதலமைச்சர் செல்வதாக தகவல் வந்ததும் கழகத் தலைவர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். அதற்கும் முதல்வர் மௌனமாகவே இருந்தார்.

“நீங்கள் பெங்களூர் வர வேண்டாம்” என்று கர்நாடக முதல்வர் அவர்கள் அதிரடியாக கூறினார்கள். மேகதாது பிரச்சினைகளில் தோல்வி கண்ட ஜோசப் விஜய் அதை திசை திருப்பும் வகையில் தொகுதி வரையறை பிரச்சினையை அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்.

மேகதாது பிரச்சினையில் உச்சநீதி மன்ற தீர்ப்பை திராவிட மாடல் நாயகர் ஆட்சியில் சட்டப்பூர்வமாக பெற்றுள்ள நிலையில், மீண்டும் மீண்டும் குழப்ப நிலை ஏற்படுத்தி தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களை ஏமாற்றிய கையாலாகாத த.வெ.க. விஜய் ஆட்சிக்கு தி.மு.க. சட்டத்துறை கூட்டம் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**தீர்மானம் – 2**

**எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைதுக்கு கண்டனம்!**

கழக இளைஞரணிச் செயலாளர், முன்னாள் துணை முதல்வர், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, த.வெ.க. ஆட்சியின் விவசாய விரோதப் போக்கினைக் கண்டித்து, தஞ்சையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசிய பேச்சின் காரணமாக, விவசாயிகளுக்கு இடையே ஏற்பட்ட விழிப்பு புணர்வையும், கடும் எதிர்ப்பையும் சந்தித்த ஜோசப் விஜய் அரசு பழிவாங்கும் போக்குடன், எதிர்கட்சித் தலைவர் அவர்களின் பேச்சை திரித்து ஆபாசமாக பேசியதாக ஒன்பது பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்த காவல்துறை, உதயநிதி ஸ்டாலின் அவர்களை நீலாங்கரை வீட்டில் வைத்து கைது செய்து அராஜகமாக செயல்பட்டது.

அவரது கைதைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டு பல்லாயிரக் கணக்கில் கைதாகினர்.

கழக சட்டத்துறை உயர்நீதிமன்றத்தை நாடிய போது எதிர்க்கட்சித் தலைவரை இன்று மாலைக்குள் விடுதலை செய்ய வேண்டும் என்று ஆணையிட்டது. தி.மு.க. மீது பெண்கள் வெறுப்புக் கொள்ள வேண்டும் என்று அபாண்டமாக ஆபாசப் பழியை ஏற்படுத்திய த.வெ.க. ஆட்சிக்கும், ஜோசப் விஜய்க்கும் சட்டத்துறையின் இக்கூட்டம் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**தீர்மானம் – 3**

**அவதூறு பிரச்சாரம்! காவல்துறைக்குக் கண்டனம்!**

கழகத் தலைவர், முன்னாள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மீது அருவருப்பாகவும் ஆபாசமாகவும் சமூக வலைதளங்களில், தொலைக்காட்சி விவாதங்களிலும் பேசி வருகின்ற த.வெ.க. நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி காவல்துறையில் மனு அளித்தும், இதுவரை நடவடிக்கை எடுக்காத த.வெ.க. அரசின் காவல்துறைக்கு தி.மு.க. சட்டத்துறையின் இந்தக் கூட்டம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**தீர்மானம் – 4**

போதைப் பொருள் பிரச்சினையில் கோவை தனியார் கல்லூரி மாணவர் அமுதன் கொலையிலும், திருவொற்றியூர் பள்ளி மாணவர் தனுஷ் கொலையிலும் காவல்துறையின் அலட்சியப் போக்கிற்கு கடும் கண்டனத்தை தெரிவிக்கிறது.

கோவையில் தனியார் கல்லூரி மாணவர் அமுதன், கல்லூரியில் போதைப்பொருள் விற்பது குறித்து தகவலை காவல்துறைக்கு தெரிவித்தார் என்று கூறி, சில மாணவர்கள் அவரை அடித்துக் கொன்றனர். இதே போல் திருவொற்றியூரில் பள்ளி மாணவர் தனுஷை சக மாணவர்கள் அடித்துக் கொன்றனர். இதுகுறித்து காவல்துறை கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதை விடுத்து திசை திருப்பும் வகையில் செயல்பட்டு வருகிறது.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## ஜனநாயக ரீதியாகப் போராடும்

# மாணவர்கள் போராட்டத்தைத் தடுப்பதா?

## பாசிச த.வெ.க. அரசுக்கு மாணவர் அமைப்புகள் கண்டனம்!

**சென்னை, ஆக. 20 -**

**‘ஜனநாயக ரீதியில் போராடும் மாணவர்கள் போராட்டத்தை த.வெ.க. அரசு ஒடுக்குவதா’ என்று மாணவர் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.**

அரசு கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்கள் அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டங்களில் பங்கேற்க கூடாது என்றும், மீறினால் பள்ளிக்கல்வித்துறை, உயர் கல்வித்துறை, காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியவை ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் த.வெ.க. அரசு உத்தரவிட்டிருந்தது.

இடதுசாரி மற்றும் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி போராட்டத்தில் மாணவர்கள் பங்கேற்பதை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து அரசு கல்லூரிகளுக்கும், தமிழ்நாடு அரசின் கல்லூரி கல்வி இயக்ககம் சுற்றறிக்கை அனுப்பியது.

**எதிர்ப்புக்கு பணிந்தது த.வெ.க. அரசு!**

இதற்கு இந்திய மாணவர் சங்கத்தினர் உட்பட பல்வேறு மாணவர் அமைப்புகள், அரசியல் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்தனர். த.வெ.க. அரசின் இந்த அணுகு முறை ஜனநாயகத்தின் அடிப்படைக்கே எதிரானது என எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், கடும் எதிர்ப்பு கிளம்பியதால், மாணவர்கள் போராடக் கூடாது என்ற கல்லூரி கல்வி இயக்ககத்தின் சுற்றறிக்கையை த.வெ.க. அரசு திரும்பப் பெற்றுள்ளது.

இதுகுறித்து இந்திய மாணவர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

**மாணவர் சங்கம் கண்டனம்!**

அரசு கல்லூரி மாணவர்கள், மாணவிகள் மற்றும் இளைஞர்கள் அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டங்கள் மற்றும் கிளர்ச்சிகளில் பங்கேற்பதைத் தடுக்கும் வகையில், பள்ளிக்கல்வி, உயர் கல்வி, காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு உயர்கல்வித்துறையின் இணை இயக்குநர் எழுதிய கடிதத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

மாணவர்கள் எந்த அரசியல் இயக்கத்தின் போராட்டத்தில் பங்கேற்கிறார்கள் என்பதை அரசு நிர்வாகம் கண்காணித்து, அதைத் தடுப்பதற்காக பல்வேறு அரசுத் துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற இந்த அணுகுமுறை ஜனநாயகத்தின் அடிப்படைக்கே எதிரானது. மாணவர்கள் குடிமக்கள் இல்லையா? கல்லூரிக்குள் நுழைந்தவுடன் அவர்கள் தங்களது அரசியல் உரிமைகளை இழந்துவிடுகிறார்களா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

மாணவர்களின் வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கும் NEET, கல்விக் கட்டணம், கல்வி உரிமை, வேலைவாய்ப்பு, சமூக நீதி உள்ளிட்ட அனைத்தும் அரசின் கொள்கைகளோடு தொடர்புடையவை.

இத்தகைய பிரச்சினைகள் குறித்து மாணவர்கள் கேள்வி எழுப்புவதும், கருத்து தெரிவிப்பதும், ஜனநாயக ரீதியான போராட்டங்களில் பங்கேற்பதும் அவர்களின் சமூகப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும்.

மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பிரச்சினைகள் அரசியலோடு தொடர்புடையதாக இருக்கும்போது, மாணவர்கள் மட்டும் அரசியலற்றவர்களாக இருக்க வேண்டும் என்று கூறுவது எப்படி நியாயமாகும்? என்று வினவியுள்ளது.

இந்த உத்தரவு எந்த அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டது என்பதையும் முதலமைச்சரும் உயர்கல்வித்துறை அமைச்சரும் விளக்க வேண்டும் என்று இந்திய மாணவர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## தமிழ்நாட்டில் – அரசுக் கல்லூரிகளில்

# மாணவர் சேர்க்கை மந்தம்!

## 27 சதவிகித இடங்கள் நிரம்பவில்லை!

சென்னை, ஆக. 20 -

தமிழ்நாட்டில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், கணிதம், இயற்பியல், வேதியியல் பாடப் பிரிவுகளில், மாணவர் சேர்க்கை மந்தமாக இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. தமிழக உயர்கல்வித் துறையின், கல்லூரி கல்வி இயக்ககத்தின் கீழ், 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றில், ஒரு லட்சத்து 26,959 இளங்கலை பட்டப்படிப்பு இடங்கள் உள்ளன.

இதற்கான 2026-27ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கை கலந்தாய்வு, கடந்த ஜூன் 5ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது. மாநகரங்களில் இயங்கும், அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில், மாணவர் சேர்க்கை அதிகம் உள்ள பாடப்பிரிவுகளுக்கு, தேவைக்கேற்ப 20 சதவீதம் வரை சேர்க்கையை உயர்த்திக் கொள்ளலாம் என, உயர் கல்வித்துறை அறிவுறுத்தியது.

அந்த வகையில், மாநிலம் முழுதும், பல்வேறு பாடப் பிரிவுகளில், 2,760 இளநிலை பட்டப்படிப்பு இடங்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, சேர்க்கை நடந்து வருகிறது.

இந்நிலையில், அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில், மொத்தமுள்ள 1,29,719 இடங்களில், மாணவர்கள் 39,527; மாணவியர் 54,885; மூன்றாம் பாலினத்தவர் 27 பேர் என, மொத்தம் 94,489 இடங்கள் நிரம்பி உள்ளன.

அதாவது, மொத்த இடங்களில், 73 சதவீதம் நிரம்பின. மீதம், 35,230 இடங்கள் காலியாக உள்ளன. கடந்த ஆண்டு களைப்போல, நடப்பாண்டும், பி.காம்., பொது பாடப் பிரிவுகள், கணினி அறிவியல் படிக்க, மாணவர்கள் அதிக ஆர்வம் காண்பித்து உள்ளனர். அதேநேரம், கணிதம், இயற்பியல், வேதியியல் பாடப் பிரிவுகள் மீதான ஆர்வம் குறைந்து, சேர்க்கை மந்தமாக நடக்கிறது.